**உள்**

**அ.வ.எண்– 102/2021**

**தேதி – 19.07.2023**

**உத்தரவு பகரப்பட்டது**

இம்மனுவானது வா.சா.1–ஐ மீண்டும் சாட்சியமளிக்க அழைக்க உத்தரவிடக்கோரி தாக்கல்.

இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கில் வாதி சாட்சி–1 விசாரிக்கப்பட்டு கடந்த 08.06.2023 ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது வாதி தரப்பில் தாவா சொத்து சம்மந்தமாக வேறு அடங்கல் கணக்கு உள்ளதா? என்று கேள்வி கேட்டதால் வீட்டில் தேடிப்பார்த்தபோது சில ஆவணங்கள் கிடைத்ததால், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வா.சா.1–ஐ மீண்டும் அழைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை பரிசீலிக்கும்போது, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை பெற்றுக்கொள்ள அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணங்கள் இல்லை என்பதால், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய வா.சா.1–ஐ அழைக்க வேண்டிய அவசியமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனு மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளை பரிசீலிக்கும்போது, வா.சா.1–ன் மூலம் குறியீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள ஆவணங்களுக்கு சாட்சியமதிப்பு கிடையாது என்பதால் அதனை குறியீடு செய்ய இயலாது என்ற காரணத்திற்காக இம்மனுவை அனுமதிக்கக்கூடாது என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வழக்கில் குறியீடு செய்யப்படும் ஆவணத்தின் செல்லும்தன்மை மற்றும் மேற்படிசான்றாவணத்தின் சாட்சியமதிப்பு ஆகியவற்றை தற்போதைய நிலையில் பரிசீலிக்க வேண்டிய அவசியமில்லை.

மாறாக வழக்கின் இறுதி தீர்ப்பின்போது பரிசீலித்தாலே போதுமானதாகும். இந்த வழக்கை

பொறுத்தமட்டில் மனுதார் தரப்பில் வா.சா.1—ன் மூலம் குறியீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அடங்கல் கணக்காகும். மேற்படி ஆவணங்களில் ஏதேனும் குறைபாடு இருந்தால் அதனை மேற்படி ஆவணம் குறியீடு ஆட்சேபனை செய்ய உரிமையுள்ளது. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும்போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம் என்ற அனுமதி வழங்கி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023—ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19—ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P KUMAR

Digitally signed by P KUMAR
Date: 2023.07.19 16:58:00 +0530

கூ.மா.உ.நீ,

அம்பாசமுத்திரம்